# வெவ்வேறு வகையான COVID-19 தடுப்பூசிகளைக் கலப்பது ஏன் ஒரு பிரச்சினையில்லை?

**COVID-19 மற்றும் அதன் திரிபுகளுக்கு எதிரான நோயெதிர்ப்பை நீங்கள் முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு. COVID-19 தடுப்பூசிகளை 2 தடவைகள் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும், 2வது தடவை நீங்கள் பெற்றுக்கொண்ட 2 வாரங்களுக்குப் பின்னர் முழுமையாக நோய்த்தடுப்புச் செய்யப்பட்டவர் என நீங்கள் கருதப்படுகிறீர்கள்.**



## எனது 2வது தடவைத் தடுப்பூசியாக வேறு வகையான ஒரு COVID-19 தடுப்பூசியை நான் எடுக்கலாமா?

ஆம், அது, COVID-19 மற்றும் அதன் திரிபுகளுக்கு எதிராக உங்களைப் பாதுகாப்பதில் பாதுகாப்பானதாகவும் வினைத்திறனானதாகவும் இருக்கிறது.

## இதற்கு முன்னர் வேறு தடுப்பூசிகள் “கலக்கப்பட்டு” இருக்கின்றதா?

ஆம், இது மிகவும் பொதுவானது. உதாரணத்துக்கு, hepatitis B மற்றும் சின்னமுத்துக்கான (measles) வெவ்வேறு வகைத் தடுப்பூசிகள் பெரும்பாலும் கலக்கப்படுகின்றன.



## 2வது தடவைத் தடுப்பூசியாக ஏன் எனக்கு வித்தியாசமான ஒரு தடுப்பூசி வழங்கப்படுகிறது?

கனடாவுக்கு விநியோகிக்கப்படும் தடுப்பூசிகள் ஒவ்வொன்றினதும் அளவு வாரத்துக்கு வாரம் வேறுபடலாம், அத்துடன், சில சந்தர்ப்பங்களில், 2வது தடவை பெற்றுக்கொள்வதற்கான நேரம் உங்களுக்கு வரும்போது 1வது தடவை நீங்கள் பெற்றிருந்த வகைத் தடுப்பூசி கிடைக்காதிருக்கலாம். ஒரே வகையான தடுப்பூசியை 2வது தடவையும் பெற்றுக்கொள்வதற்கு எவ்வளவு காலம் நீங்கள் காத்திருக்க வேண்டுமென்பது எங்களுக்குத் தெரியாது. முதலில் உங்களுக்கு கிடைக்கக்கூடிய mRNA தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதே (Moderna அல்லது Pfizer) COVID-19 இலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த வழியாகும்.



## எனக்கான இரண்டாவது தடவைத் தடுப்பூசியாக எந்த COVID-19 தடுப்பூசியை நான் பெற்றுக்கொள்ள வேண்டும்?

தற்போது, Moderna மற்றும் Pfizer COVID தடுப்பூசிகளை முதலாவது மற்றும் இரண்டாவது தடவைத் தடுப்பூசிகளாக பெரும்பாலானோருக்குக் கனடா வழங்கிவருகிறது. இந்த இரண்டு தடுப்பூசிகளும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை அத்துடன் மிகவும் வினைத்திறனாவை (2 தடவைகள் பெற்றுக்கொண்ட பின்னர் COVID நோயைத் தடுப்பதில் சுமார் 95% வினைத்திறனானவை).



## உங்களின் 1வது மற்றும் 2வது தடவைத் தடுப்பூசிகளாக வெவ்வேறு வகையான COVID-19 தடுப்பூசிகளைப் பாதுகாப்பாக எடுத்துக்கொள்ளலாம்:

| 1வது தடவை பெற்றுக்கொண்ட தடுப்பூசி | 2வது தடவைத் தடுப்பூசிக்கான தெரிவுகள் |
|---|---|
| Pfizer/BioNTech | Pfizer அல்லது Moderna<br>1வது தடவைத் தடுப்பூசியை எடுத்துக் குறைந்தது 21+ நாட்களின் பின்னர் |
| Moderna | Moderna அல்லது Pfizer |



| | |
|---|---|
| | 1வது தடவைத் தடுப்பூசியை எடுத்துக் குறைந்தது 28+ நாட்களின் பின்னர் |
| AstraZeneca | Pfizer அல்லது Moderna (பரிந்துரைக்கப்படுகிறது)<br>அல்லது AstraZeneca<br>1வது தடவைத் தடுப்பூசியை எடுத்துக் குறைந்தது 56+ நாட்களின் (8 வாரங்கள்) பின்னர் |

பரிந்துரைக்கப்பட்ட சேர்க்கைகளில் ஏதாவது ஒன்றை நீங்கள் பெற்றுக்கொண்டால், 2வது தடவை நீங்கள் பெற்றுக்கொண்ட 2 வாரங்களுக்குப் பின்னர் முழுமையாக நோய்த்தடுப்புச் செய்யப்பட்டவர் என நீங்கள் கருதப்படுகிறீர்கள்.

## எனது 2வது தடவைத் தடுப்பூசியாக வித்தியாசமான ஒரு தடுப்பூசியை நான் பெற்றுக்கொண்டால் வித்தியாசமான பக்க விளைவுகள் எனக்கு வருமா?

Moderna மற்றும் Pfizer/BioNTech COVID-19 தடுப்பூசிகள் மிகவும் பாதுகாப்பானவை. அத்துடன், அவற்றின் பக்க விளைவுகள் ஒரேமாதிரியானவை. உட்செலுத்தப்படும் இடமான தோளில்/புயத்தில் வலி, உடல் மற்றும் தசை வலிகள், குளிர்நடுக்கம், சோர்வாக இருத்தல் மற்றும் காய்ச்சல் இருப்பது போன்ற உணர்வு ஆகியவற்றை மிகவும் பொதுவான பக்கவிளைவுகள் உள்ளடக்குகின்றன. சிலருக்கு, அவர்களின் இரண்டாவது தடவைத் தடுப்பூசியின் பின்னர் சற்று வலுவான பக்க விளைவுகள் ஏற்படுகின்றன (உ+ம். அதிகளவிலான சோர்வு அல்லது அதிகளவிலான தசை வலிகள்) - உங்களின் நோயெதிர்ப்புத் தொகுதி செயல்படுகிறது என்பது இதன் கருத்தாகும்! இந்தப் பக்க விளைவுகள் பொதுவாக ஒன்று முதல் மூன்று நாட்களில் குறைந்துவிடும்.

**COVID-19 மற்றும் அதன் திரிபுகளுக்கு எதிரான நோயெதிர்ப்பை நீங்கள் முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு COVID-19 தடுப்பூசிகளை 2 தடவைகள் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும். இது உங்களையும், உங்களின் அன்புக்குரியவர்களையும், உங்களின் சமூகத்தையும் COVID-19 நோயிலிருந்து பாதுகாக்கிறது.**

இந்த அறிக்கை உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்! ஒலிப்பதிவாக அல்லது வீடியோவாகப் பதிவுசெய்வதற்கு இந்த ஆவணத்தைப் பயன்படுத்தும்படி அல்லது மேலதிகமான மொழிகளில் இதை மொழிபெயர்த்து ஏனையோருடன் பரவலாகப் பகிரும்படி உங்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து மூலத்தைக் குறிப்பிட மறக்காதீர்கள்: Women's College Hospital, OCASI, TAIBU Community Health Centre மற்றும் Refugee 613.

ஜூலை *7, 2021* நிலவரப்படி துல்லியமானது.

இந்தச் செய்தியறிக்கையிலுள்ள தகவல்கள் கனேடிய மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன: Meb Rashid MD, துணைப் பேராசிரியர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம்; Vanessa Redditt, MD, விரிவுரையாளர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம்; மற்றும் Isaac I. Bogoch, MD, இணைப் பேராசிரியர், ரொறன்ரோப் பல்கலைக்கழகம்

பங்களிப்பு வழங்கியவர்கள்: Andrea Chittle, Kelly Grindrod, Noah Ivers, Samira Jeimy, Tara Kiran, Kate Miller, Menaka Pai, Adrian Poon, Samantha Yammine, Sabina Vohra-Miller, Kristen Watt, Holly Witteman

{REFUGEE}613 TAIBU COMMUNITY HEALTH CENTRE OCASI Ontario Council of Agencies Serving Immigrants WCH WOMEN'S COLLEGE HOSPITAL Healthcare | REVOLUTIONIZED

Funded by: Immigration, Refugees and Citizenship Canada

Financé par : Immigration, Réfugiés et Citoyenneté Canada

With contributions from: pchs Serving Diverse Communities MCIS LANGUAGE SOLUTIONS